கற்பியுங்கள் ஆசிரியர்களே!-சிறுவர் மணி

அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த, ஆப்ரகாம் லிங்கன் தனது மகன் படித்த பள்ளியின் தலைமையாசிரியருக்கு, ஆசிரியர்கள் தனது மகனுக்கு எதைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஒரு கடிதம் எழுதினார்.
அந்தக் கடிதத்தின் முக்கிய பகுதிகள்-

• ""எல்லா மனிதர்களும் நேர்மையானவர்களும் அல்ல; உண்மையானவர்களும் அல்ல. ஆனால், ஒவ்வொரு கெட்டவனுக்கும் ஈடாக ஒரு நல்லவன் இருக்கிறான் என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

• ஒவ்வொரு சுயநலமிக்க அரசியல்வாதிக்கும் ஈடாக ஓர் அர்ப்பணிப்புத்தன்மை கொண்ட தலைவன் இருக்கிறான் என்பதைக் கற்றுக் கொடுங்கள்.

• ஒவ்வொரு எதிரிக்கும் ஈடாக ஒரு நண்பன் இருக்கிறான் என்பதைக் கற்றுக் கொடுங்கள்.

• தானாகக் கிடைக்கும் ஐந்து ரூபாயை விட உழைத்து சம்பாதித்த ஒரு ரூபாய் உயர்ந்தது என்று கற்றுக் கொடுங்கள்.

• தோல்வி அடைந்தால் வருத்தப்படமாலிருக்கவும் வெற்றி பெற்றால் சந்தோஷப்படவும் கற்றுக் கொடுங்கள்.

• பிறர் மீது பொறாமைப்படாமலிருக்கவும் அமைதியான சிரிப்பின் அர்த்தத்தை உணரவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

• வியப்புக்குரிய புத்தக உலகைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கற்றுக் கொடுங்கள்.

• வானத்தில் வட்டமிடும் பறவைகள், தேனீக்கள், பசுமையான மலைப் பகுதிகளில் காணப்படும் மலர்கள் ஆகியவற்றின் அழகை ரசிக்கக் கற்றுக் கொடுங்கள்.

• பிறரை ஏமாற்றுவதை விட வீழ்ச்சி அடைவது பெருந்தன்மையானது என்பதைக் கற்றுக் கொடுங்கள்.

• நல்லவர்களோடு இதமாகவும் முரடர்களோடு முரட்டுத்தன்மையோடும் நடந்து கொள்ளவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

• மனிதர்கள் அனைவரும் ஆட்டுமந்தைகளாகச் செல்லும்பொழுது, அதில் சேராமல் தனித்திருக்க சுயபலம் பெற்றிருக்க வேண்டும் என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

• பிறர் சொல்வதைக் கேட்கவும் நல்லவற்றை மட்டுமே எடுத்துக் கொள்ளவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்!"

• லிங்கனின் கோரிக்கைகள் எவ்வளவு அற்புதமானவை பாருங்கள். இவற்றையெல்லாம் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் நிச்சயமாக நல்ல மனிதர்களாக எதிர்காலத்தில் மாறுவார்கள். அப்போதுதான் அவர்கள் கற்ற கல்வியும் முழுமையடையும்.

• மாணவர்களும் மேற்சொன்னவற்றை மன உறுதியுடன் கற்றுக் கொள்ள வேண்டும்: தேர்வில் மதிப்பெண்கள் பெறுவது மட்டுமே கல்வியல்ல!

-தகவல் உதவி: கி.முருகவேள், கெங்கவல்லி.